
# இந்தியாவில் காசநோயும் மாற்றுத்திறனாளிகளும்

## சிறப்பம்சங்கள்

## அறிமுகம்

உலகில் உள்ள மொத்த காசநோயாளிகளில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் உள்ளனர். காசநோய் என்பது மருத்துவ, சமூக மற்றும் பொருளாதார பரிணாமங்களை கொண்ட ஒரு சிக்கலான நோய் ஆகும். இது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களது குடும்பங்களையும் பாதிக்கிறது. மாற்றுத்திறனானது இந்த பாதிப்பில் உள்ள ஒரு முக்கிய அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது.




காசநோய் பாதிப்புக்கு முன்னர் இருந்த மாற்றுத்திறனாகட்டும் அல்லது காசநோயினால் ஏற்பட்ட மாற்றுத்திறனாகட்டும், காசநோய் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இடையே உள்ள தொடர்பு குறித்து அதிகம் ஆய்வு செய்யப்படவில்லை.

காசநோய் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இடையே உள்ள பொதுவான பிரச்சனைகளை புரிந்து கொள்வதற்கான முதல் படியாக USAID ஆதரவுடன் ALLIES திட்டத்தின் மூலம் REACH தொண்டுநிறுவனத்தால் இந்தியா முழுவதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது மூன்று முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தியது.

- காசநோய் காரணமாக ஏற்படுகின்ற குறுகிய அல்லது நீண்ட கால மாற்றுத்திறன்
- மாற்றுத்திறனானது எவ்வாறு காசநோய் பராமரிப்பு படிநிலைகளை பாதிக்கிறது.
- காசநோய் சேவைகளை பெறுவதில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ள சவால்கள்.

காசநோய் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இடையே உள்ள தொடர்புகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய அவசர தேவையை இந்த ஆய்வின் அறிக்கை அடிக்கோடிட்டு காட்டுகிறது. இந்தக் கையேடு, இந்தியாவில் காசநோய் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இடையே உள்ள பொதுவான விஷயங்களை அனைவரும் புரிந்து கொள்ள உதவும்.

## காசநோய்க்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?

**இரண்டு பொதுவான ஒற்றுமைகள் உள்ளன**

i. ஒரு தனிநபரின் உடலில் உள்ள மாற்றுத்திறனானது காசநோய்க்கான அவர்களின் பாதிப்பை அதிகரிக்கலாம், மேலும் அவர்கள் காசநோய் சேவைகளை பெறுவதையும் மிகவும் கடினமாக்கலாம். மாற்றுத்திறனானது அந்த தனிநபரின் காசநோய்க்கான அறிகுறிகளை மறைத்து தாமதமான நோய் கண்டறிதலுக்கு வழிவகுக்கும்.

ii. காசநோயின் சிகிச்சையின் போது அல்லது அச்சிகிச்சையின் விளைவாக ஒரு நபருக்கு ஒன்று அல்லது பல மாற்றுத்திறன்கள் உருவாகலாம். அதாவது, ஒருவர் காசநோயிலிருந்து குணமடைந்திருந்தாலும் அவர் தன் வாழ்நாள் முழுவதும் மாற்றுத்திறனாளியாக வாழ வாய்ப்புள்ளது.

## மாற்றுத்திறனாளி என்பவர் யார்?

மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016 படி, மாற்றுத்திறன் உள்ள நபரை நீண்ட கால உடல், மன, அறிவுசார அல்லது உணர்ச்சி குறைபாடு உள்ளவர் என வரையறுக்கிறது. இந்த தடைகளானது, மற்றவர்களுக்கு சமமாக, சமூகத்தில் அவர்களின் முழுமையான பயனுள்ள பங்கேற்பை தடுக்கிறது.

இந்தியாவில், பொதுவாக மாற்றுத்திறனாளிகள் மிகவும் ஒதுக்கப்பட்ட குழுக்களில் உள்ளனர். அவர்களின் உடல்நலமும், சுகாதார நிலைமைகளும் மோசமாக உள்ளது.

காசநோய் மற்றும் உயர்தர காசநோய் சேவைகள் பற்றிய துல்லியமான தகவல்களை அணுகுவதற்கான வகையில் மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்துவதே அவசியமான முதற்படியாகும்.






காசநோய் மற்றும் மாற்றுத்திறனால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை பயணத்தில் உள்ள பல்வேறு விதமான காட்சிகள்

காசநோய் சிகிச்சைக்கு முன்பே மாற்றுத்திறன் கொண்ட ஒரு நபர் காசநோய் சிகிச்சை பெற்று வெளியேறும்போது அவர் அதே மாற்றுத்திறனுடன் வெளியேறுகிறார் அல்லது அதனோடு கூடவே ஒரு புதிய மாற்றுத்திறனையும் பெறுகிறார்.

காசநோய் சிகிச்சையின் போது ஏற்பட்ட மாற்றுத்திறன், மருந்துகள் நிறுத்தப்படும் போது அல்லது சிகிச்சை முறை மாற்றப்படும் போது குணமாகும்.

சில சமயங்களில் சிகிச்சையின் போது பெறப்பட்ட மாற்றுத்திறன் வாழ்நாள் முழுவதும் அல்லது நிரந்தர மாற்றுத்திறனாகவும் நீடிக்கிறது.

**காசநோயின் விளைவாக ஏற்படும் பொதுவான பிரச்சனைகள்**
காசநோயை முழுமையாக குணப்படுத்த முடியும் ஆனால் அது மாற்றுத்திறன்களை அல்லது பிற சுகாதார பிரச்சனைகளை உருவாக்கலாம். காசநோய்க்கு பின் சுவாசம், எலும்பு மற்றும் தசை தொடர்பான பிரச்சினைகள், கேட்கும் திறனில் பாதிப்பு, பார்வை குறைபாடு, சிறுநீரகம் மற்றும் நரம்பியல் கோளாறுகள், மனநலம் தொடர்பான பிரச்சினைகள் போன்றவை பொதுவாகக் காணப்படுகின்றன. நுரையீரலில் ஏற்படும் பிரச்சனைகள் காசநோயால் ஏற்படும் பொதுவான மற்றும் கடுமையான பிரச்சனையாகும். எம்பீமா மற்றும் நுரையீரல் பைப்ரோஸிஸ், இரட்டை பார்வை, வலிப்பு போன்றவையும் இதில் அடங்கும். காசநோயானது ஆரோக்கியம் தொடர்பான வாழ்க்கைத் தரத்தையும் பாதிக்கிறது.




## காசநோயும் மாற்றுத்திறனாளிகளும்: ஒரு பொதுவான ஒற்றுமைப் பார்வை

ஒருவருக்கு காசநோய் வருவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. காசநோயால் ஏற்படும் மாற்றுத்திறன் ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது

### முன் நோய் கண்டறிதல் - ஆரோக்கியத்தை தீர்மானிக்கும் காரணிகள்

**காசநோயின் சமமற்ற தாக்கம்:**
காசநோய் சமூக பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களை அதிகம் பாதிக்கிறது. பல சவால்களைக் கொண்ட ஏழை மக்களுக்கு காசநோய் வருவதற்கான வாய்ப்பு மற்றவர்களை விட 1.82 மடங்கு அதிகம்.

**இணை நோய்கள்:** காசநோய் வரும் போது உள்ள இணை நோய்கள் நேரடியாக பாதிப்பை உண்டாக்கும்.

**மாற்றுத்திறனாளிகளின் நிலை:** மாற்றுத்திறனாளிகளுக்கு காசநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

### நோய் கண்டறிதல்

**மாற்றுத்திறனாளிகள் மற்றும் காசநோய் கண்டறிதல்:**
மாற்றுத்திறனாளிகள் சுகாதார அமைப்பில், குறிப்பாக காசநோய் பராமரிப்பில், பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. அவர்கள் நோய் கண்டறிதல் செயல்முறையில் கூடுதல் சவால்களை எதிர்கொள்கிறார்கள், இதனால் தாமதம் ஏற்பட்டு, மருந்து எதிர்ப்பு காசநோய் (DRTB) உருவாகும் ஆபத்து அதிகரிக்கக்கூடும்.

### சிகிச்சை மற்றும் பராமரிப்பு

**மருந்துகள் மூலம் ஏற்படும் மாற்றுத்திறன்:** சில காசநோய் எதிர்ப்பு மருந்துகள் (DRTB), குறிப்பாக மருந்து எதிர்ப்பு காசநோயால் பாதிக்கப்பட்டவர்களிடம், எதிர்விளைவுகளை உருவாக்கக்கூடும். காசநோய்க்கான மருந்துகள் மூலம் ஏற்படும் பக்கவிளைவுகள் பொதுவாக தீர்க்கக்கூடியவை மற்றும் நீண்டகால மாற்றுத்திறனுக்கு வழிவகுப்பதில்லை. இருப்பினும், இரண்டாம் நிலை மருந்துகளின் பக்கவிளைவுகள் அதிகமாகவும், நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

### காசநோய் மற்றும் காசநோய் ஏற்படுத்தும் மாற்றுத்திறன்களினால் ஏற்படும் பொருளாதார விளைவுகள்

**குடும்பங்களுக்கான செலவு அதிகரித்தல்:** காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான சாதனங்கள் மற்றும் உதவிகளுக்கான விலையும் அவர்களின் செலவை அதிகரிக்கிறது. மேலும் வேலை இழப்பு காரணமாக பொருளாதார சிக்கல்கள் அதிகரிக்கிறது

## காசநோய்க்குப் பிறகான வாழ்க்கை

**உடல் ஆரோக்கியத்தில் உள்ள நீண்ட கால பாதிப்பு:** மாற்றுத்திறனால் ஏற்படும் பிரச்சனைகள் சமூக-பொருளாதார நிலை, வேலை மற்றும் வயது ஆகியவற்றால் மாறுபடும். காசநோயில் இருந்து குணமடைந்து வந்தவர்கள் பெரும்பாலும் வாழ்நாள் முழுவதும் மாற்றுத்திறன்களை எதிர்கொள்கின்றனர், மேலும், இணை நோய்களும் தொடர்கின்றன.

**உடல் மறுவாழ்வு தேவை:** காசநோயின் நீண்ட கால விளைவுகளையும் நோய் தொற்றுகளையும் சமாளிப்பதற்கு மறுவாழ்வு தேவைப்படுகிறது. இதற்கான வலுவான திட்டங்களை சுகாதாரத்துறை, மற்ற துறைகளுடன் இணைந்து செயல்படுத்த வேண்டியது அவசியம்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவான ஆலோசனை தேவை:** காசநோயிலிருந்து குணமடைந்து வந்தவர்களுக்கு மாற்றுத்திறன்களைச் சமாளிக்க உதவுவதற்காக தொழிற்சார் மறுவாழ்வு மற்றும் வாழ்வாதாரப் பயிற்சி போன்றவை முக்கியமாக தேவைப்படுகிறது. குறிப்பாக வயதானவர்களுக்கும், காசநோய் காரணமாக குடும்பத்தால் கைவிடப்பட்டவர்களுக்கும் இது தேவைப்படுகிறது.

**மன ஆரோக்கியத்தில் நீண்ட கால தாக்கம்:** காசநோய் சிகிச்சை முடிந்த பிறகும் மனநல பிரச்சனைகள் தொடர்கின்றன அல்லது வெளிப்படுகின்றன. காசநோய் சிகிச்சையின் போது அது மனநலத்தை மோசமாக பாதிக்கிறது என்றாலும், காசநோயிலிருந்து குணமடைந்து வந்தவர்கள் பல சவால்களை எதிர்கொள்வதன் விளைவாக மீள் தன்மையை வளர்த்துக் கொள்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்

**காசநோய் மற்றும் மாற்றுத்திறன் ஆகியவற்றின் காரணமாக பாலின ரீதியாக ஏற்படும் களங்கம்:** காசநோயிலிருந்து குணமடைந்து வந்த பெண்கள் குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் சிகிச்சை முடிந்த பிறகும் தொடர்ந்து களங்கத்தை எதிர்கொள்கின்றனர்

**பொருளாதாரத்தில் நீண்ட கால தாக்கம்:** காசநோயிலிருந்து குணமடைந்து வந்தவர்களுக்கு பக்க விளைவுகளும், மாற்றுத்திறன்களும் ஏற்படுகின்றன, அதன் விளைவாக காசநோயிலிருந்து குணமடைந்து வந்தவர்கள் நோய் குணமடைந்த பிறகும் அதிக செலவை எதிர்கொள்கின்றனர்.

**மீண்டும் நோய் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்:** காசநோய் குணமாகி விட்ட போதிலும் மக்களிடம் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. அது காசநோய்க்குப் பிந்தைய விளைவுகளை உருவாக்கி மீண்டும் காசநோய் வர நேரிடும்.

## முக்கிய பரிந்துரைகள்



### தேவையான திட்ட பரிந்துரைகள்

- காசநோயில் உள்ள அனைத்து அம்சங்களிலும் மாற்றுத்திறனிற்கு கவனம் செலுத்துதல்
- காசநோய் கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளை மையமாகக் கொண்ட சிகிச்சைக்கு முன்னுரிமை அளித்தல்
- மாற்றுத்திறனாளிகளை பாதிக்கும் நோய்களை கையாள நுண்ணிய திட்டமிடுதலை உறுதி செய்தல்
- மாற்றுத்திறனாளிகளுக்கு பயனுள்ள பராமரிப்பையும், ஆதரவையும் வழங்குவதில் சமுதாயத்தையும், தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்துதல்.



### நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை தொடர்பான பரிந்துரைகள்

- Ni-kshay தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒரு தனி அளவுகோளை அல்லது பகுதியை உருவாக்குதல்
- நோய் கண்டறிதலில் தாமதங்களை குறைத்தல், மாற்றுத்திறனாளிகளின் மத்தியில் விரைவான காசநோய் கண்டுபிடிப்பை மேற்கொள்ளச் செய்தல்.
- மருந்துகளினால் ஏற்படும் எதிர் வினைகள் மற்றும் பக்க விளைவுகளை அடையாளம் காண வலுவான கண்காணிப்பு அமைப்பை நிறுவுதல்
- காசநோய் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கான தெளிவான வழிகாட்டுதலை உருவாக்குதல் மற்றும் பரப்புரை செய்தல்
- மக்களை மையமாகக் கொண்ட பராமரிப்பு மூலம் சிகிச்சையில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பக்க விளைவுகளின் தாக்கத்தை கண்காணித்தல் மற்றும் குறைத்தல்
- சிகிச்சையில் உள்ள அனைத்து மக்களுக்கும் அவரது குடும்பங்களுக்கும் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வை உறுதி செய்தல்

## முக்கிய பரிந்துரைகள்

### பிற உடல் நலம் மற்றும் சமூக பொருளாதார பரிணாமங்கள்

- காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உடல், மன, சமூக, பொருளாதார தேவைகளை நிவர்த்தி செய்ய, மேம்படுத்தப்பட்ட ஆலோசனை சேவைகளை உறுதி செய்தல்.
- காசநோய் கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளை பராமரிப்பவர்களுக்கும் ஏற்ற ஆலோசனை சேவைகளை உருவாக்குதல்
- காசநோயுடன் தொடர்புடைய களங்கம் மற்றும் பாகுபாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NTEP) யுக்தியை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்தல். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பராமரிப்பாளரின் சரியான புரிதலுக்காக குடும்ப பராமரிப்பு செயல்முறையை உருவாக்குதல்
- காசநோய்க்கான சிகிச்சையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஊட்டச்சத்து ஆதரவை வலுப்படுத்துதல்
- சிறப்பான களப்பணிகளை மேற்கொண்டு அதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் நம்பிக்கையை பொது சுகாதார திட்டத்தின் மீது உயர்த்துதல்.

### காசநோய்க்கு பிறகான வாழ்க்கை

- மாற்றுத்திறனாளிகள் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், உட்பட காசநோயால் குணமடைந்து வந்தவர்களுக்கான சிகிச்சைக்கு பிந்தைய தொடர் கண்காணிப்பிற்க்கான (Post Treatment Follow Up) வலுவான வழிமுறையை நிறுவுதல்
- சிகிச்சைக்குப் பிந்தைய தொடர் கண்காணிப்பில் உள்ள மாற்றுத்திறன்களை அடையாளம் கண்டு அதை வகைப்படுத்துதல்
- சிகிச்சைக்குப் பிந்தைய தொடர் கண்காணிப்பில் காசநோயில் இருந்து குணமடைந்து வந்த பயிற்சி பெற்ற நபர்களை ஈடுபடுத்துதல். தனிநபர் தொடர்புகள், ஆதரவு குழுக்கள் மூலம் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்
- மறுவாழ்வு திட்டங்கள், மையங்களை உருவாக்க வழி செய்தல். தற்போதுள்ள மறுவாழ்வு மையங்களுடன் தொடர்பை உருவாக்குதல்
- பிசியோதெரபி சேவைகள், வாழ்வாதாரப் பயிற்சி உட்பட காசநோயால் குணமடைந்து வந்தவர்களுக்கு தொழில்சார் மறுவாழ்வு போன்றவற்றிற்கு வழிவகை செய்து கொடுத்தல்.
- மாற்றுத்திறனாளிகளில் காசநோயால் குணமடைந்து வந்தவர்களுக்கு தொடர்ந்து ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்தல்
- மாற்றுத்திறனாளிகள், அவர்களுக்கான நலத் திட்டங்களை அணுகுவதற்கும் மற்றும் சேவையை எளிமையாக பெறுவதற்குமான தன்மையை விரிவுபடுத்துதல்






**Resource Group for Education and Advocacy for Community Health (REACH)**
No. 194, 1st Floor, Avvai Shanmugam Salai Lane,
Lloyds Road, Royapettah, Chennai – 600014
Phone: 044-45565445 / 28132099

**Email**: support@reachindia.org.in
**Media Related Queries**: media@reachindia.org.in

www.reachindia.org.in | @Speaktb | @SPEAKTB | @REACHSpeakTB

All photographs in this report that feature TB Champions and/or people with TB are used with full, informed consent.

*This document is made possible by the generous support of the American People through the United States Agency for International Development (USAID). The contents are the sole responsibility of REACH and do not necessarily reflect the views of USAID or the United States Government.*